# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 11.12.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற குத்பவில் அல்லாஹ்வின் **நூர்** என்ற பண்பை விளக்கினேன். அச்சொல்லின் அகராதிப் பொருள்களை விளக்கிய பிறகு அகராதி வல்லுநர்கள் அச்சொல்லை விளக்குவதற்காக மேற்கோள் காட்டியிருந்த திருக்குர்ஆன் வசனங்களுள் சிலவற்றை வைத்து விளக்கினேன்.

**அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல் அர்ழ்** – அல்லாஹ் வானங்கள் பூமியின் ஒளியாக இருக்கிறான் (24:36) என்ற வசனத்தை வைத்து விளக்கினேன். நான் கூறியது போன்று அகராதி வல்லுநர்கள் தாம் விளக்கிய பொருளை நிரூபித்துக் காட்டுவதற்காக திருக்குர்ஆனிலிருந்து மேற்கோள் காட்டியிருந்த இரு வசனங்களை நான் விளக்குவேன். அதுவும் சென்ற குத்பாவில் குறிப்பிட்ட வசனங்களைக் குறித்து தான் விளக்குவேன்.

பரவக்கூடிய வெளிச்சத்திற்கு **நூர்** என்று சொல்லப்படும். பரவக்கூடிய அவ்வொளி இரு வகைப்படும். ஒன்று, உலகியல் ஒளி. மற்றொன்று ஆன்மீக ஒளி. அதனை சிந்தனை, அறிவு என்று கூறப்படும். இந்த ஒளி நிச்சய உறுதி, சிந்தனை அறிவின் மூலமே கிடைக்கிறது. அறிவின் ஒளி குர்ஆன் ஒளியாகும். இன்னொரு ஒளி பௌதீக கண்கள் மூலம் பார்க்கத்தக்க ஒளியான சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், மற்ற ஒளி உணரத்தக்க பொருள்களில் காணப்படுகின்ற ஒளியாகும்.

நூரே இலாஹி என்ற இறையொளிக்கு சூரா அன்ஆம் மற்றும் சூரா மாயிதாவின் வசனங்களை முப்ரதாத் என்ற அகராதி நூலிலிருந்து விளக்கினேன். ஆனால் அதனை விரிவாக கூறவில்லை.

பௌதீக கண்கள் மூலமாக பார்க்கும் ஒளிக்கு உதாரணமாக அல்லாஹ் சூரா யூனுஸ் –ன் 6 வது வசனத்தை முப்ராத் (அகராதி) குறிப்பிடுகிறது.

**ஹுவல்லஸீ ஜஅலஷ் ஷம்ஸ லியாஅவ் வல்கமர நூரா** – அவனே சூரியனைச் சுயமாக ஒளிதரக்கூடியதாகவும், சந்திரனைப் பிரகாசிக்கக் கூடியதாகவும் ஆக்கினான் (10:6)

இங்கு சூரியனுக்கு **லியா** (ஒளி) என்ற சொல், சந்திரனுக்கு **நூர்** (வெளிச்சம்) என்ற சொல் ஆகிய இரு வேறு சொற்கள் வந்துள்ளதே என்று சிலருக்கு ஐயம் தோன்றலாம்.

சூரியனின் ஒளி மிக அதிகம். சந்திரன் குறைந்த ஒளியைக் கொண்டதாகும்.

அகராதி வல்லுனர்களும் இதனையே கூறுகின்றனர். **லியா** என்பது பேரொளியையும், **நூர்** என்பது ஒளியையும் குறிக்கும். **லியா** –வை **நூர்** உடன் ஒப்பிடும் போது **லியா** மிகவும் ஆற்றல் வாய்ந்தது.

**லியா** என்பது தன்னகத்தே ஓர் ஒளியைக் கொண்டது. **நூர்** என்பது பொதுவாக இன்னொரு பொருளிலிருந்து ஒளியைப் பெறக்கூடியது. ஆனால், அல்லாஹ் தன்னைப் பற்றிக் கூறும்போது கூட **அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல்அர்ள்** – அல்லாஹ் வானங்கள், பூமியின் ஒளி ஆக இருக்கிறான் (24:36) என்று வந்துள்ளதே அதற்கு என்ன பொருள்? அகராதி வல்லுனர்கள், அந்த வசனத்தில் வந்துள்ள **நூர்** என்ற சொல்லுக்கு **லியா** என்று பொருள் கூறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து அல்லாஹ் **சிராஜும் முனீரா** – ஒளி வீசும் சூரியன் என்று கூறியுள்ளான். அவர்களின் ஒளியினால் மற்றவர்களும் வெளிச்சம் பெறுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் **நூர்** –ம் அல்லாஹ்வின் **நூர்** – லிருந்தே வந்துள்ளது. அகராதி வல்லுனர்கள் கூறுகின்றார்கள். பேரொளியின் வெளிச்சத்துக்குக் கூட **நூர்** என்று கூறப்படும். ஒளிக்கதிர்களுக்கு **நூர்** எனப்(பொருள்)படும். தன்னகத்தே ஒரு ஒளியைக் கொண்டு அதனை பிறரிடம் பிரதிபலிக்கச் செய்வதற்கும் **நூர்** என்று சொல்லப்படும்.

ஒளிக்கதிர்களின் ஒளிப் பிரதிபலிப்பையே நாம் பௌதீக ஒளியாகவும், ஆன்மீக ஒளியாகவும் காண்கிறோம். அல்லாஹ் வழங்கிய ஒளியைக் கொண்டு பார்க்கும் போது மட்டுமே பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் மற்ற பொருள்களை, பார்ப்பதற்குப் பயன்படக்கூடிய ஒவ்வொரு வெளிச்சமும் **நூர்** ஆகும்.

எனவே இறைவனது இருப்பில் மூழ்கிவிடும் போது வெளிப்படையான கண்களைக் கொண்டும் அவ்வொளியை உணர முடியும். ஏனெனில் பேரொளியைச் சிந்தும் பல ஒளி(க்கதிர்)களை, சூரியன், சந்திரன், பிரபஞ்சத்தின் ஒவ்வொன்றையும் அல்லாஹ் மனிதனுக்குத் தொண்டு செய்ய வைத்துள்ளான். அவ்வொளிகளை தோன்றச் செய்துள்ளான். அவற்றை இறைவனால் வழங்கப்பட்ட ஒளியால் மட்டுமே சரியான முறையில் (புரிந்து கொள்ள) முடியும். ஆனால் நாத்திகர்களுக்கு அவற்றைப் பார்க்கும் போது இறைவன் தென்படுவதில்லை. ஆனால் மூஃமின்களுக்கு அவற்றில் இறைவன் தென்படுகின்றான். அம்மூஃமின்கள் அப்பொருளிலிருந்து பயன்பெறுகின்றனர். மேலும் அவை இறைவனது ரஹ்மானிய்யத் – பொதுவாக அருள்பாலிக்கும் பண்பு ஆகும். அவற்றிலிருந்து ஒரு மூஃமின் பயன்பெறுவதுடன் இறைவனது ரஹீமிய்யத் – குறிப்பிட்ட அருளின் ஒளியிலிருந்தும் பங்குபெறுகின்றனர். இது மனிதனது முயற்சியால் கிடைக்கும் பலன் ஆகும். அதன் மூலம் சில வேளை மனிதன் பிரபஞ்சத்தின் அறிவைப் பெறுகிறான். அதுவும் ஓரளவுக்குப் பெறுகிறான். அதே வேளையில் நாத்திகர்கள் இந்த சந்திரன், சூரியனிடமிருந்து வெளிப்படையான பயனை மட்டுமே பெறுகின்றனர். திருக்குர்ஆனின் ஒளி வழங்கப்பட்ட இவ்வுலகில் வசிக்கும் ஓர் உண்மையான மூஃமின் பௌதீக, ஆன்மீக பலன்களைப் பெறுகின்றனர். சில இடங்களில் இறைவன் திருக்குர்ஆனில் இந்த இரு ஒளிகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றான். அதன் மூலம் அவனுக்கு உலகியல் பணிகளிலும், ஆன்மீக பணிகளிலும் பயன் கிடைக்கிறது.

பிறகு மறு உலக ஒளி குறித்து அகராதிகளில் வருகிறது. அகராதி வல்லுநர்கள் மறு உலக ஒளிக்கு ஆதாரமாக இவ்வசனத்தை குறிப்பிடுகின்றனர்.

**நூருஹும் யஸ்ஆ பய்ன அய்தீஹிம் வபிஅய்மானிஹிம் யகூலூன ரப்பனா அத்மிம்லனா நூரனா** – அவர்களின் ஒளி அவர்களுக்கு முன்னாலும், அவர்களின் வலப்பக்கங்களிலும் விரைவாகச் செல்லும். அவர்கள் எங்கள் இறைவா! எங்கள் ஒளியை எங்களுக்கு முழுமையாக்குவாயாக! (66:9) என்று கூறுவார்கள்.

இது மறு உலக ஒளியாகும். இது மரணத்திற்குப் பிறகு அவர்களுக்கு தெரிய வரும். இந்த வசனத்தை சென்ற குத்பாவில் நான் விளக்கமால் விட்டுவிட்டேன். எனவே அதுபற்றி சிறிது விளக்கினேன். மேலும் இன்னொரு வசனம் சூரா மாயிதாவின் ஒரு வசனத்தை கூறினேன். ஆனால் விளக்கவில்லை.

**யா அஹ்லல் கி[த்]தாபி க(d)த்ஜாஅ(k)கும் ரஸுலுனா யுபய்யினுல(k)கும் கஸீரம் மிம்மா குன்[த்]தும் யு(kh)ஹ்ஃபூனா மினல் கி[த்]தாபி வயஃ ஃபூ அன்கஸீர். க(d)த்ஜாஅ(k)கும் மினல்லாஹி நூருவ் வகி[த்]தாபும் முபீன்.**

**யஹ்(d)தீபிஹில்லாஹு மனித்தபஅ ரிள்வானஹு ஸுபுலஸ்ஸலாமி வயு(kh)ஹ்ரி ஜுஹும் மினல்லுலுமா[த்]தி இலந்நூரி பிஇஸ்னிஹீ வயஹ்தீஹிம் இலா ஸிராத்திம் முஸ்தகீம்** – வேதத்தையுடையவர்களே! நம்முடைய தூதர் உங்களிடம் வந்து விட்டார். வேதத்திலிருந்து நீங்கள் மறைத்தவற்றுள் பெரும்பாலானவற்றை அவர் உங்களுக்கு விளக்குகிறார். பெரும்பாலான குற்றங்களையும் மன்னிக்கின்றார். நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், மிகத் தெளிவான ஒரு வேதமும் வந்துள்ளன.

அவனது விருப்பத்தைத் தேடுகிறவர்களை அல்லாஹ் இதன் மூலம் சமாதான வழிகளில் நடத்துகின்றான். மேலும் அவன் தனது கட்டளையினால், அவர்களை இருள்களிலிருந்து வெளியேற்றி ஒளியினிடத்துக் கொண்டு வருகின்றான். மேலும் நேரான வழியில் அவர்களைச் செலுத்துகிறான். (5:16,17)

இந்த வசனத்தின் மூலம், வேதத்தையுடையவர்களின் தவறுகளை சுட்டிக் காட்டுகிறான். அவர்கள் தமது வேதத்திலுள்ள பல விஷயங்களை மறைத்தனர். அல்லது மாற்றினர். அவர்களைப் பற்றி இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு அறிவித்து, மறைக்கப்பட்ட அப்போதனைகளை எடுத்துக் கூறினான். அதுமட்டுமின்றி இன்னும் பல புதிய கட்டளைகளும், புதிய விஷயங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலம் உலகிற்கு எடுத்துக் கூறப்படுகின்றன. ஆன்மீக முன்னேற்றத்திற்கான புதிய வழிகள் அதன் மூலம் திறக்கின்றன. (அது) மனித இயல்புக்கு ஏற்ற கட்டளைகளாகும். அதனால்தான் 24:36 வசனத்தில் வருகிறது. உங்களிடம் ஒரு ரஸூலை அனுப்பியுள்ளோம். அவர் கிழக்கைச் சார்ந்தவரோ, மேற்கைச் சார்ந்தவரோ அல்ல. அவரிடம் ஒருதலைப்பட்சமான போதனைகள் கிடையாது. முழுமையான போதனையையே இஸ்லாம் அவர் மூலம் எடுத்து வைத்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நபிமார்களின் உள்ளத்தில் இறங்கும் வஹி கூட அவர்களின் இயல்புக்கு ஏற்ப இறங்குகிறது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய இயல்பில் கம்பீரமும் கோபமும் இருந்தது. அவர்களுக்கு இறங்கிய ஷரீஅத்தும் கூட அதனை பிரதிபலித்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இயல்பில் மென்மை இருந்தது. எனவே இன்ஜீலின் போதனையில் மென்மையும் சகிப்புத் தன்மையும் அடங்கியிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இயல்பில், மிக உயரிய தகுதி உடைய உறுதியான நடுநிலைமையான (போதனைகள் இருந்தன). அவர்களிடம் எல்லா இடத்திலும் ஒட்டுமொத்தமாக மென்மை மட்டுமோ அல்லது எல்லா இடத்திலும் ஒட்டுமொத்தமாக கடுமை மட்டுமோ காண முடிந்ததில்லை. எல்லா இடத்திலும் கடும் சினம் கொண்டவராகவோ அல்லது எல்லா இடத்திலும் மென்மையானவராகவோ காண முடிந்ததில்லை. அவர்களின் வழி மிகவும் நேர்வழியாக இருந்தது. மிகவும் ஞானமிக்க முறையில் சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான பண்புகளை வெளிப்படுத்தும் இயல்பு அவர்களிடம் இருந்தது. எனவே அத்தகைய வேதம் அவர்களிடம் இறங்கியது. அவ்வேத்தில் கடுமையையும், கருணையையும், மென்மை, சீர்திருத்தம், கடுமை அனைத்தும் இருந்தது. இந்த வகையில் திருக்குர்ஆனின் போதனை இருந்தது என்பதற்கான ஓர் உதாரணமாக அமைந்த ஒரு வசனம் இதுவாகும்.

**வஜஸாவு ஸய்யிஅ[த்]தின் ஸய்யிஅ[த்]தும் மிஸ்லுஹா. ஃபமன் அஃபாவஅள்ரஹ ஃபஅஜ்ருஹு அலல்லாஹ் –** ஒரு தீங்குக்குரிய கூலி அதே அளவு தீங்கேயாகும் (என்பதனை அவர்கள் நினைவில் கொள்கின்றனர்). **ஆனால் எவர் மன்னித்து, சீர்திருத்துகிறாரோ அவருக்குரிய நற்பலன் அல்லாஹ்விடமுள்ளது. (42:41)**

இத்தகைய சிறப்பான போதனையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கியது. முழுக்க முழுக்க தண்டனை மட்டுமே தீமைக்கு கூலியாகாது. மன்னிப்பினால் சீர்திருத்தம் ஏற்பட வாய்ப்பிருக்கும் எனில் மன்னிக்க வேண்டும். தவறு செய்தவரின் நல்லொழுக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்பிருக்குமானால் மன்னிக்க வேண்டும் – தண்டனை மூலம்தான் சீர்திருத்தம் ஏற்படும் எனில் தண்டனை மிகவும் அவசியமாகும். ஆனால் எவ்வளவு அவசியமோ அவ்வளவு தண்டனைதான் கொடுக்க வேண்டும். அநீதியிழைக்கக் கூடாது.

வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்ட வேண்டும் என்பது இஸ்லாமிய போதனையன்று. அல்லது கண்ணுக்குப் பதிலாக கண்ணை கண்டிப்பாக பிடுங்க வேண்டும் என்பதும் அல்ல.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த வசனத்தில் ஒரு விஷயத்தின் இரு அம்சமும் கூறப்பட்டுள்ளது. ஒன்று மன்னிப்பு. மற்றொன்று தண்டனை. இரண்டையும் நடுநிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதுவே ஞானமிக்க நடைமுறையாகும். அதுவே இவ்வுலகை நடத்துகிறது.

இதனைக் கூறிய பிறகு, உங்களிடம் இறைவனிடமிருந்து ஒரு வேதம் வந்துள்ளது. அது பழைய விஷயங்கள், புதிய விஷயங்கள் எல்லாவற்றையும் உங்களுக்கு விளக்குகிறது என்று கூறுகின்றான்.

**க(d)த்ஜாஅ(k)கும் மினல்லாஹி நூருவ் வகி[த்]தாபும் முபீன்** – நிச்சயமாக உங்களுக்கு அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், மிகத் தெளிவான ஒரு வேதமும் வந்துள்ளன. (5:16)

இங்கு ரஸூல் என்று கூறப்பட்டது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் திருக்குர்ஆனில் சிராஜன் முனீரா – ஒளி வீசும் சூரியன் என்று கூறியுள்ளான். ஒளி சிந்தும் சூரியனாகிய அவர்கள் மூலமே இறைவனின் ஒளி உலகில் பரவ வேண்டியிருந்தது. அவரது தொடர்பின்றி எவரும் உலகில் அல்லாஹ்வின் ஒளியைப் பெற இயலாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு மற்றும் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப கடைசி காலத்தில் எல்லாரையும் விட அதிகமாக ஒரு மனிதர் அவ்வொளியைப் பெறவிருந்தார். அவருக்கு மஸீஹ் மஹ்தி என்ற கண்ணியம் தரப்படவிருந்தது. அதன் அடிப்படையிலேயே அவருக்கு நபி என்ற சிறப்பும் வழங்கப்பட்டிருந்தது. ஏனெனில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இன்ஸானே காமில் – முழுமையான மனிதராகிய சிராஜும் முனீர் என்ற முத்திரை எவர் மீது படுகிறதோ அவர் மீதும் அந்த இறையொளி இறங்குகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நபித்துவ முத்திரை நுபுவ்வத்தை அடைப்பதற்காக அன்று. அது அந்த ஒளியை மேலும் வழங்குவதற்காக வந்துள்ளது. அதுவே கத்மே நுபுவ்வத் ஆகும். இது ஓர் ஒளியாகும். எத்தகைய ஒளி என்றால் பல உயரிய ஒளிகளை உருவாக்கக் கூடியது. இறைவன் கூறுகிறான்: அந்த ஒளியுடன் கிதாபே முபீன் – தெளிவான வேதமும் உள்ளது. எனவே முழுமையான வேதமாகிய குர்ஆனைத் தவிர வேறு ஒரு வேதம் இனி இல்லை என்று ஓர் அஹ்மதி நம்புகிறார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் **நூரே குர்ஆன்** – குர்ஆனின் ஒளி மற்றும் **நூரே முஹம்மத்** – முஹம்மதின் ஒளி இரண்டையும் இணைத்து இவ்வாறு ஒரு கவிதையில் கூறுகிறார்கள்:

வானத்திலிருந்து ஓர் ஒளியைக் கொண்டு வந்தார். அவரே ஓர் ஒளியாவார்.
காட்டுவாசிகளிடமிருந்து அவர் தோற்றுவிக்கப்பட்டதில்
ஆட்சேபனை என்ன?

கல்விகற்ற மக்களிடமிருந்து ஒருவர் தோன்றி இறுதி வேதத்தை கொண்டு வந்துள்ளதாக வாதிக்கிறார். அவரே கூட ஓர் உம்மியாக இருக்கிறார் என்று எதிரிகள் ஆட்சேபணை செய்கின்றனர். பெரும் படிப்பறிவுள்ளவராக அவர் இல்லை என்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இது ஒன்றும் ஓர் ஆட்சேபணைக்குரியதல்ல. இது அவர்களின் அந்தஸ்தை உயர்த்தவே செய்கிறது. வானத்திலிருந்து ஒரு முழுமையான ஒளியை அவர் கொண்டு வந்தார். அவர் மனிதனை நல்லொழுக்கமுள்ளவனாகவும் இறைவன் மீது பற்று கொண்ட மனிதனாகவும் ஆக்கி விட்டார். அந்த காட்டுவாசிகள் அந்த ஒளியிலிருந்து பங்கு பெற்றனர். அந்த போதனையின்படி அமல் செய்தனர். பிறகு உலகின் மிகச்சிறந்த கண்ணியமிக்க மனிதர்களாயினர். ஐரோப்பா இன்று அறிவின் ஒளியை உலகிற்கு காட்டுகிறது. இம்மக்கள் அவ்வொளியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் அவர்கள் கொண்டு வந்த வேதத்தில் இருந்துமே பெற்றனர். ஐரோப்பியர் இவர்களிடமிருந்தே கல்வி கற்றனர். உலகியல் கல்வி மட்டுமின்றி ஆன்மீக கல்வியும் கற்றனர். முஸ்லிம்கள் இன்று இதனைக் குறித்து சிந்திக்க வேண்டும். முழு உலகையும் ஒளியூட்டிய அவ்வொளி, ஆன்மீக அறிவுகளாயினும் சரி, பௌதீக அறிவுகளாயினும் இருவகையிலும் அவர்களிடமிருந்து உலகில் பரவியது. அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களிடமும் அவ்வொளி உருவானது. அல்லாஹ், ரஸூல், குர்ஆன் இவற்றை ஒப்புக் கொண்டிருப்பதாக வாதம் செய்பவர்களிடம் இவ்வொளி காண முடியாததன் காரணம் என்ன? இக்காலத்தில் ஒரு மனிதர் அந்த ஒளியை பிரதிபலிப்பவராக மாற வேண்டியிருந்தது. அதுவே அக்காரணமாகும். இந்த இடம் அஹ்மதிகளும் கூட சிந்திக்க வேண்டிய இடமாகும். இந்த நூர் –ஐ ஏற்றுக் கொண்டதாக வாயளவில் கூறிய மக்களிடம் ஏன் அவ்வொளி தென்படவில்லை? இந்த குர்ஆனிய ஒளியிலிருந்து பங்கு பெறுவதற்கு அவரது உண்மைப் பேரன்பரின் விளக்கத்தை படிக்கவும் அமல் செய்யவும் வேண்டும்.

உலகில் மூழ்கிக் கொண்டு ஒளியைத் தேடாதீர்கள். மாறாக, திருக்குர்ஆனில் மூழ்கி இறைஞானத்தின் முகத்தை தேடுவது அவசியமாகும். உலகிற்கு உண்மை ஒளியின் மூலம் வெளிச்சமூட்ட வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது அரபி கவிதைகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒளியை இவ்வாறு கூறுகிறார்கள்.

அவர்கள் அல்லாஹ்வின் ஒளியை மீண்டும் ஒருமுறை உயிரூட்டினார்கள். அவர்களே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; பின்பற்றத்தக்கவர்; அருள் பெறத்தக்கவர்களாகிய இறைஞானத்தின் கருவூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஆவார்கள். ஆனால் அதனைப் புரிவதற்கு நமது கண்களிலும் ஒளியை உருவாக்குவது அவசியமாகும். அதனை உருவாக்கும் பொறுப்பை இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைத்துள்ளான். அந்த ஒளியைப் பெறுவதற்காக அவர்களிடம் பைஅத் செய்ததன் ஹக்கை நிறைவேற்றியவர்கள் நற்பேறு பெற்றவர்களாவர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த தகுதியை தாம் எவ்வாறு பெற்றார்கள் என்பதை விளக்கியவாறு கூறுகிறார்கள். நான் எப்போதும் ஆச்சரியத்தோடு பார்க்கிறேன். முஹம்மத் (ஸல்) என்ற அந்த அரபி நபி (அவர்மீது ஆயிரமாயிரம் ஸலவாத் உண்டாவதாக) எத்துணை உயர் தகுதி வாய்ந்த நபி ஆவார்கள். அவரது தகுதியின் எல்லையை ஒருவர் உணர்ந்து கொள்ள இயலாது. அவரது வாழ்க்கையை மதிப்பிடுவது சாத்தியமான காரியமில்லை. அவர்கள் கண்டறியப்பட வேண்டிய அளவுக்கு கண்டறியப்படவில்லை என்பது மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயமாகும். தவ்ஹீது உலகிலிருந்து மறைந்து விட்டது. அந்த வீரரே அதனை உலகில் திரும்ப கொண்டு வந்தார். அவர் இறைவன் மீது அளவற்ற நேசம் கொண்டிருந்தார். மனித குலத்தின் மீதும் அளவற்ற நேசம் கொண்டிருந்தார். எனவே அவரது உள்ளத்து இரகசியங்களை அறிந்த இறைவன் முன்னாலும் பின்னாலும் உள்ள எல்லா நபிமார்களையும் விட சிறப்பை அவர்களுக்கு வழங்கினான். அவர்களது விருப்பங்களை அவர்களின் வாழ்நாளிலேயே நிறைவேற்றினான். அவர்களே எல்லா அருளின் தலையூற்றாவார்கள். அவர்களுக்குப் பிறகு யாராவது ஒருவன் அவரை விட தமக்கு மேன்மையிருப்பதாகக் கூறினால் அவர் இல்லாமல் தான் மேன்மை அடைந்து விட்டதாக கூறினால் அவன் மனிதனல்ல. மாறாக, ஷய்த்தானின் சந்ததியாவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இல்லாமல் எனக்கு இந்த சிறப்பு கிடைத்தது என்று எவரும் கூறினால் அவனும் மனிதனல்ல; ஷய்த்தானின் சந்ததியாவான்.

மேலும் கூறுகிறார்கள்: எல்லா அருள்களின் சாவி அவர்களுக்கு தரப்பட்டுள்ளது. எல்லா இறை கருவூலங்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் மூலமாக எவர் அதனை பெறவில்லையோ அம்மனிதன் இறையருளில் இருந்து விலக்கப்பட்டவனாவான். நிரந்தரமாக விலக்கப்பட்டவனாவான். நாம் என்ன? எல்லா அருள்களும் அவரிடமிருந்தே பெற்றோம். உண்மை தவ்ஹீதை அவரிடமிருந்தே பெற்றோம். உண்மையான இறைவனை அவர் மூலமே கண்டறிந்தோம். அந்த காமில் நபி மூலமே அவரது நூர் மூலமே நமக்கு எல்லாம் கிடைத்தது. அவரது முகத்தை நமக்கு காட்டக்கூடிய இறை அறிவிப்புகள், இறைவனின் அழைப்புகள் மாநபி மூலமாகவே கிடைத்தன. அந்த நேர்வழியின் சூரியனின் ஒளி நம்மீது வெயிலைப் போன்று பட்டது. அவருக்கு முன்னால் நாம் நிற்கும் வரைதான் அந்த ஒளியினால் வெளிச்சம் பெறுவோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த மேற்கோள் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து அவர்கள் மீது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்டிருந்த மதிப்பு வெளிச்சமாகியுள்ளது.

இயல்பு நன்றாக இருந்தால் அவர்கள் மீது (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது) ஆட்சேபணை செய்பவர்களுக்கு இதுவே போதிய பதிலாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட்டு விட்டால் இவர்களுக்கென்று எந்த தனி அந்தஸ்தும் இல்லை.

நாமும் இந்த நேர்வழியின் சூரியனின் முன் நிற்கும் வரை ஒளியைப் பெற முடியும். அவர்களைக் குறித்து இறைவன் சிராஜன் முனீரா என்று அதனால்தான் கூறியுள்ளான்.

சூரா மாயிதாவுடைய 17 வது வசனம் அதற்கு அடுத்த வசனத்தினை மேற்கோள் காட்டிக் கூறினார்கள். இரண்டு ஒளிகள் உள்ளன. ஒன்று, குர்ஆன். இன்னொன்று ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள். ஆகவே

இந்த இரு பொருள்கள் மட்டுமே அல்லாஹ்வின் ஒளியை பெற்றுத் தரும் என்று இறை நியதி ஒரு முடிவு செய்துள்ளது. அந்த இரு பொருள்களே அமைதியின் வழியில் எடுத்துச் செல்பவை. அது அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருபவை. அமைதியின் வழி என்றால் என்ன? அல்லாஹ்வை சென்றடைய பல வழிகள் உள்ளன. அவை இறைவன் வரை கொண்டு சேர்க்கின்றன. அந்த ஒவ்வொரு வழியிலும் ஷய்த்தான் அமர்ந்துள்ளான். ஷய்த்தானிடமிருந்து தப்பிக்க மனிதன் அல்லாஹ் வரை சென்று சேர்வதற்கு உதவும் வழியே அமைதியின் வழியாகும். அவர் இறை ஒளியில் இருந்து பங்கு பெறுபவராகிறார். இந்த அமைதியின் வழி கிடைக்கப் பெற்றவர்கள் இறைவனின் வழிகாட்டலையும் பெற்று இறை திருப்தியைத் தேடுகின்றனர். பிறகு அவர்களின் பாதம் இருளிலிருந்து ஒளியின் பக்கம் செல்லத் தொடங்குகிறது. அவர்கள் சிராத்தல் முஸ்தகீம் –ன் மீது செல்லத் தொடங்குகிறார். அல்லாஹ் அவனது ரஸூல், அவனது ஒளிமிக்க வேதத்திலிருந்து அருள் பெறுவதற்காக அல்லாஹ்வின் விருப்பத்தைப் பின்பற்ற வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற இவ்விரண்டும் இணைவது அவசியமாகும். அல்லாஹ்வின் திருப்தியின் உயரிய முன்மாதிரியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காட்டினார்கள். அவர்களுக்குப் பிறகு அவர்களின் தர்பிய்யத் மற்றும் தூய்மையாக்கும் ஆற்றலின் விளைவாக சஹாபாக்கள் அத்தகுதியை பெற்றனர். அம்மக்கள் இருளிலிருந்து ஒளியின் பக்கம் வந்தது மட்டுமின்றி ரலியல்லாஹு அன்ஹும் – அல்லாஹ் அவர்களிடம் திருப்தி கொண்டான் என்ற சிறப்பையும் பெற்றார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களும் கூட அந்த ரஸூலைப் பின்பற்றி அழகிய முன்மாதிரியைக் காட்டினார்கள்.

அந்த சஹாபாக்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நட்சத்திரத்தைப் போன்றவர்கள் என்று கூறினார்கள். அவர்களுடன் தொடர்பு கொண்டு ஒருவர் வழிகாட்டப் பெறலாம். அம்மக்கள் எத்துணை நற்பேறு பெற்றவர்கள். இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் செல்லும் பல கட்டங்களை அவர்கள் கடந்து முன்னேறினர். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்களாயினர். பிறகு அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப இறுதிக் காலத்தில் மஹ்தியை அனுப்பினான். அவர்கள் பிறகு தமது எஜமானரும் வழிகாட்டியுமாகியவரின் ஒளி பிரதிபலித்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது எனது அளவற்ற ஸலாம். அவர்களிடமிருந்தே நாம் ஒளியைப் பெற்றோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் ஒப்பற்ற ஒளி இருந்தது. பிறகு அவர்களின் ஒளியை நேரடியாகப் பெற்றவர்களும் கூட தமது உள்ளத்தை அந்த நூர் – ஆல் நிறைத்தவாறு சிராத்தே முஸ்தகீம் –ல் நின்றனர். தவ்ஹீதை நிலைநிறுத்துபவர்களாகினர். அல்லாஹ் நமக்கு சிராத்தே முஸ்தகீம் என்ற துஆவை கற்றுத் தந்துள்ளான். அதற்காக தத்தமது தகுதிக்கேற்ப அந்த ஒளி கிடைக்கிறது. சிலருக்கு குறைவாக சிலருக்கு அதிகமாக கிடைக்கிறது. ஒவ்வொருவருக்கும் அந்த ஒளி கிடைப்பது கண்டிப்பானது. நல்ல நிய்யத்துடன் ஒருவர் அதன் பக்கம் முன்னேறுவதே நிபந்தனையாகும்.

அல்லாஹ் எவருக்கும் அவரது சக்திக்கு அதிகமாக சுமை சுமத்துவதில்லை. ஒவ்வொருவரும் அந்த குறிப்பிட்ட தகுதி வரை அடைய வேண்டும் என்று அதனால் தான் கூறப்பட்டுள்ளது. அது மிகவும் உயரிய இடமாகும். ஆனால் முயற்சி செய்ய வேண்டிய இடமும் ஆகும். அதனைப் பெற முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். சிராத்துல் முஸ்தகீம் வரை அல்லாஹ் வழிகாட்டுகிறான் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காகவே இறைவன் ஒரு துஆவையும் கற்றுத் தந்துள்ளான். தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்திலும் அதனைப் படிக்கிறோம். ஆனால் அதற்காக முயற்சி செய்யுமாறு கட்டளை உள்ளது. கூறினார்கள்: சிராத்துல் முஸ்தகீமில் செல்வதற்கு ஒளி தேவை. அவ்வொளி அல்லாஹ் அவனது ரஸூல் மற்றும் குர்ஆனின் மூலமே கிடைக்கும். எவர் அதற்காக முயற்சி செய்வாரோ அவரை அல்லாஹ் சிராத்தல் முஸ்தகீமில் சென்று அவனது நூரைப் பெற்றவர்களுடன் சேர்த்து விடுவான்.

சிராத்தல் முஸ்தகீம் என்றால் என்ன? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

சிராத்தல் முஸ்தகீம் உண்மை மற்றும் ஞானத்தின் அடிப்படையாகக் கொண்டது. அது மூன்று வகைப்படும். அறிவுரீதியானது, செயல்ரீதியானது, யதார்த்தமானது. இல்ம் மூலமாக அல்லாஹ்வின் உரிமையை அறிவது. அடியாரின் மீது உமக்குள்ள கடமையை அறிவது – ஒருவர் தனது நஃப்ஸை அறிவது.

செயல்ரீதியான சிராத்துல் முஸ்தகீம் என்பது இல்ம் மூலம் அவர் கண்டறிந்த விஷயத்தை அமல் செய்வது. உதாரணமாக, இறைவன் ஒருவன் என்பது ஓர் இல்ம் ஆகும். அதனை முழு அளவில் குறைகளற்றவாறு முழுமையாக செய்வது. அவனது எல்லா பண்புகளில் முழுமையான அடியான் ஆகி விடுவது. எல்லா விதமான பலவீனங்களையும் விட்டகன்ற அமலை இறைவனுக்காக செய்வது. அல்லாஹ்வின் உண்மையான அறிவு என்பது மனிதன் தாம் பெற்ற அனைத்தும் இறைவனால் வழங்கப்பட்டவை என்று உணர்வதாகும். எல்லா சிறப்புகளின் தொகுப்பு அவனேயாவான். ஒவ்வொரு பொருளும் அவன் பக்கமே செல்கிறது. அவன் ஒவ்வொரு பலவீனங்களில் இருந்தும் தூய்மையானவன். எல்லா முழுமையான பண்புகளும் கொண்டவன். அவனது அந்த அனைத்துப் பண்புகள் குறித்து நமக்கு தெரிந்திருந்தாலும் சரி தெரியாவிட்டாலும் சரி – முழுமையான முறையில் அவனது அடிமைகளுக்குள் வந்துவிட வேண்டும். இதுவே சிராத்தல் முஸ்தகீம் ஆகும். இதிலிருந்து வெளியேறக் கூடாது.

அமல் ரீதியான சிராத்தல் முஸ்தகீம் என்பது இக்லாஸுடன் அவனுக்கு கட்டுப்படுவது; அவனுக்கு எந்த இணையும் வைக்காமல் இருப்பது; அவனது கட்டளைகளை முழுமையாக அமல்படுத்துவது; அவனுக்கு எந்த இணையும் வைக்காமல் இருப்பது அல்லாஹ்வின் கட்டளைக்கு முன் எந்த ஒரு பொருளும் பொருட்டாக இருக்கக் கூடாது. அவனிடமே துஆ கேட்க வேண்டும். கவனம் இருக்க வேண்டும். இது அமல்ரீதியான சிராத்தல் முஸ்தகீம் ஆகும். எல்லாம் அழியக் கூடியது என்பதை அறிவதே அறிவின் தவ்ஹீது ஆகும். அவன் எந்த குறையும் இல்லாதவன். தன்னிடத்தில் ஒரு முழுமையைக் கொண்டவன். அவ்வுணர்வு வரும் போது தான் இறைமகத்துவம் உள்ளத்தில் நிலைபெறும். அமலின் சிராத்தல் முஸ்தகீம் என்பது அவனுக்காகவே நற்செயல்களை செய்வதாகும். இது அமலின் தவ்ஹீது ஆகும். முழுக்க முழுக்க இறைவனது நல்லொழுக்கத்தில் தான் மாய்ந்து விட வேண்டும். ஒவ்வொரு வேலையையும் செய்யும் போதும் இறைவன் கூறியபடி எனது இவ்வேலை இருக்க வேண்டும் என்று புரிந்து செய்வது ஆகும். அப்போதுதான் சரியான வழியில் நடக்கிறார்; உண்மையான முறையில் நற்செயல் செய்துள்ளார் என்று பொருள்படும். நஃப்ஸில் என்னென்ன ஆபத்துகள் உருவாகும் என்பதை அறிந்திருப்பது அறிவின் நேர்வழியின் ஒரு வகையாகும். காட்டுதல், பெருமை, பொறாமை, கருமித்தனம், பேராசை, ஏமாற்றுதல், அநீதி இவை அனைத்தையும் தீய பண்புகள் என்று தெரிந்து வைத்திருப்பது அறிவின் சிராத்தல் முஸ்தகீம் ஆகும். எனவே மேற்கூறிய இந்த அனைத்து தீமைகளையும் அறிந்திருப்பது அறிவின் தவ்ஹீதாகும். நஃப்ஸ் விஷயத்தில் அமலின் சிராத்தல் முஸ்தகீம் என்பது மேற்கண்ட தீமைகளை விட்டு விலகிவிட வேண்டும். வெறுமனே அவற்றை உள்ளத்தை விட்டு காலி செய்தால் போதாது. அதில் நன்மைகளால் நிரப்ப வேண்டும். பாத்திரத்தை விட்டு அசுத்தத்தை அகற்றுவது மட்டும் போதாது. அதில் நல்லவற்றைக் கொண்டு நிரப்ப வேண்டும். இதுவே அமலின் சிராத்தல் முஸ்தகீம் ஆகும். இந்த தவ்ஹீதைக் கொண்டவரின் நோக்கம் தமது உள்ளத்தை அல்லாஹ் அல்லாதவற்றின் இலக்குகளை விட்டு தூய்மையாக்க வேண்டும். அதில் உயர் தகுதியைப் பெற வேண்டும். அதுவே ஹாலி சிராத்தல் முஸ்தகீம் ஆகும். சிராத்தல் முஸ்தகீம் யதார்த்தமான நேர்வழி மற்றும் அமலி சிராத்தல் முஸ்தகீம் இரண்டிற்கும் இடையில் உள்ள நுட்பமான வேறுபாடு என்னவென்றால், அமலி சிராத்தல் முஸ்தகீம் என்பது நஃப்ஸின் கடமைகளுள் ஒன்றாகும். உழைப்பின் மூலம் மனிதன் அதனை வழங்குகிறான். வெளியிலிருந்து அவனுக்கு ஏதேனும் சிறப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரு மனிதரிடம் இது காணப்படுகிறது. ஆனால் ஹக்குல் இபாத் – அடியார்களுக்காற்ற வேண்டிய கடமை என்பது சந்தர்ப்பம் கிடைக்கும் போதுதான் அவன் நிறைவேற்றினானா இல்லையா? இல்லையெனில் நான் தூய்மையாகி விட்டேன் என்று அவர் நினைத்திருப்பார் என்று புரியவரும். அமல்ரீதியாக பெரும்பாலாருக்கு இவரது அமல் மூலம் பலன் கிடைக்கும் போது அமல்ரீதியான சிராத்தல் முஸ்தகீம் இவரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது தெரிய வரும். சேவையின் நிபந்தனையை அவர் நிறைவேற்றியுள்ளார் என்று பொருள்படும்.

அல்லாஹ்வுக்குரிய கடமையை அவர் செய்திருக்கிறாரா இல்லையா என்பது அடியாருக்குள்ள உரிமையை அவர் நிறைவேற்றுவதன் மூலம் தெரிய வருகிறது. மனத்தூய்மைக்கு எந்த சேவையும் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஒரு காட்டிற்குள் தன்னந்தனியாக வாழ்ந்து கூட ஒருவர் மனத்தூய்மை பெறலாம். தனியாக இபாதத்தில் மூழ்கியிருந்து விடலாம். ஆனால் அடியாருக்குரிய கடமையை தன்னந்தனியே

காட்டுக்குள் இருந்து செய்ய முடியாது. துறவறம் இஸ்லாத்தில் கூறப்படவில்லை. மாறாக தடுக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்குரிய கடமை, அடியாருக்குள்ள கடமை இரண்டையும் நிறைவேற்ற வேண்டும். அதுவன்றி சிராத்தல் முஸ்தகீம் பெற்றவராக ஒருவர் ஆக இயலாது. அவரிடம் இல்ம் ரீதியாகவும் அமல் ரீதியாகவும் சிராத்தல் முஸ்தகீம் வெளிப்பட வாய்ப்பில்லாமல் போகிறது.

மேலும் கூறுகின்றார்கள்: உண்மையான இல்ம் மற்றும் அமலைப் பெறுவதுதான் சிராத்தல் முஸ்தகீமின் நோக்கமாகும். அந்நிலையில் கல்வியின் மூலம் கிடைத்த தவ்ஹீது நற்செயல்கள் மூலம் கிடைத்த தவ்ஹீதாக ஆகிறது. தவ்ஹீதை தவிர வேறு எதனையும் பெற வேண்டிய திருக்குர்ஆன் அசல் இலக்காக கூறவில்லை. தவ்ஹீதைப் பெறுவதே அசல் இலக்காகும். மற்றவை அதனை அடையும் வாய்ப்பை பெறும் முயற்சியாகும். இதனை மனிதன் பெற்று விட்டால் பிறகு அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தி வல் அர்ழ் – அல்லாஹ் வானங்கள் பூமியின் ஒளியாவான் (24:36) என்பதை புரிந்து கொள்வான். இந்த நோக்கத்தை நிறைவேற்றவே உலகில் நபிமார்கள் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரிலும் மேலாக அல்லாஹ் நபி (ஸல்) அவர்களை அனுப்பினான். குர்ஆன் கரீமின் வடிவில் கிதாபுன் முபீனாக அது நமக்கு கிடைத்துள்ளது. அது ஒரே இறைவனின் ஒளியை நமக்கு சொல்லித் தருகிறது. அவனது ஒளியைப் பிரதிபலிக்கின்றனர். அனைத்திலும் அதிகமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவனது ஒளியை பிரதிபலித்தார்கள். திருக்குர்ஆனை புரிபவர்களும் அதிலிருந்து ஒளியைப் பெறுகின்றனர். இந்த ஒளியைக் கொண்டே முழு உலகத்தையும் வெளிச்சமாக்க வேண்டும். முழு உலகையும் ஒரே இறைவனின் அடியாராக்க வேண்டும். அல்லாஹ் இந்த உண்மையான ஒளியைப் பெறும் வாய்ப்பை நமக்கு தருவானாக – மற்றவர்களுக்கும் அதனை வழங்குபவர்களாவோமாக. அதனைப் பரப்பும் கடமையை செய்தவர்களாவோமாக.

★ ★ ★ ★ ★


JUMUA KUTHBA

**HADHRAT KHALIFATUL MASIH V**

AT BAITUL FUTUH MOSQUE, LONDON

ON 11.12.2009

Translated by : **Muallim M. NIZAMUDDIN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**